# 9. சாமுவேல்

ஒருநாள் சாமுவேல் தமது கடமைகளை முடித்துவிட்டு ஆண்டவரின் இல்லத்தில் படுத்திருந்தான்.





"சாமுவேலே! சாமுவேலே! என்று அழைக்கும் குரல் கேட்டது. அவன் நித்திரையிலிருந்து எழுந்து ஏலியிடம் ஓடிச் சென்றான்.



"இதோ! அடியேன் என்னை அழைத்தீர்களா?" என்றான்.

"நான் அழைக்கவில்லை திரும்பிச் சென்று படுத்துக்கொள்" என்றார் ஏலி.



மீண்டும் அதே குரல் கேட்டது.
ஏலியிடம் ஓடி என்னை
அழைத்தீர்களா?
என்று கேட்டான்.
"நான் அழைக்கவில்லை
மகனே!
சென்று படுத்துக் கொள்"
என்றார்.



"சாமுவேல், சாமுவேல்" என ஆண்டவர் அழைக்கும் குரல் கேட்டது.

"ஆண்டவரே பேசும் உம் அடியேன் கேட்கிறேன்" என்று மறுமொழி கூறினான்.